**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

--------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 32/2013 |
| Prosecution Witness | : | அ.சா.12 |
| Name | : | ஜோசப் சிரில் (காவல் ஆய்வாளர் ) |
| Father's / Husband Name | : | அந்தோணிசாமி |
| Address | : | கன்னியாகுமரி |
| Age | : | 53/2025 |

**தேதி : 22.01.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S.தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது

**முதல் விசாரணை**

நான் தற்போது தற்காலிக பணிநீக்கத்தில் இருந்து வருகிறேன். கடந்த 2010ம் வருடம் பெரம்பலூர் மாவட்ட குற்ற பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்தபோது 01.03.2010ம் தேதி மாவட்ட குற்ற பிரிவு உதவி ஆய்வாளர் திருமதி. ரத்தினாம்பாள் என்பவர் வழக்கு பதிவு செய்த குற்ற பிரிவு குற்ற எண். 3/2010 முதல் தகவல் அறிக்கை பெற்று விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அன்றைய தினமே விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் ஜான்சி, பெல்லா சாவித்திரி ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 02.03.2010ம் தேதி சாட்சிகள் ஜோசப் முத்துராஜ் , ஜோன், பெஞ்சமீன் தர்மராஜ் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 05.03.2010ம் தேதி சாட்சிகள் முருகேசன், ஜான்சி, பெல்லா சாவித்திரி, ஜோசப் முத்துராஜ், டேவிட், குமார், குணசீலன், பெஞ்சமீன், பிச்சைமுத்து, கோமகன் ஆகியோர்களை ்விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

அன்றைய தினமே செட்டிக்குளம் சார்பதிவாளர் அவர்களுக்கு செட்டிக்குளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பத்திர எண்.371/2008 3547/2008 மற்றும் 3551/2008 ஆகிய அசல் ஆவணங்கள் கோரி வேண்டுகோள் கடிதம் அனுப்பினேன். 15.03.2010ம் தேதி மேற்படி வேண்டுகோள் கடிதத்தின்பேரில் ஆவணத்தின் நகல்கள் மட்டும் கிடைக்கப்பெற்றது. அதனடிப்படையில் சாட்சி இருதயமேரி சார்பதிவாளர் என்பவரை 19.04.2010ம் தேதி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 30.04.2010ம் தேதி எதிரிகள் டேவிட் மற்றும் குமார் ஆகிய இருவரும் சென்னை உயர்நீதிமன்றத்தில் Crlmp.No. 8991/2010ன் படி முன்ஜாமீன்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

20.04.2010ம் தேதி இந்த வழக்கு சம்மந்தமான அசல் ஆவணங்களை ஆஜர்படுத்தக் கோரி செட்டிக்குளம் சார்பதிவாளர் ் அலுவலகத்திற்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டது. 20.11.2010ம் தேதி இவ்வழக்கின் சாட்சி பழனிவேல் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. 25.12.2010ம் தேதி நான் பணிமாறுதல் காரணமாக இவ்வழக்கின் மேல் விசாரணையை எனக்கு பின்னால் வந்த ஆய்வாளர் விவேகானந்தன் என்பவரிடம் வழக்கு கோப்பை ஒப்புவித்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

சாட்சிகள் ஜான்சி, பெல்லா சாவித்திரி, ஜோசப் முத்துராஜ், ஜோன் பெஞ்சமீன் ஆகியோர்களை விசாரித்து பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தின் கையெழுத்துடன் நான் தேதியை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்களை உடனுக்குடன் நான் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேனா என்றால் இல்லை. பட்டியல் சாட்சி 6 மாவட்ட பதிவாளர் முருகேசன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்த தேதியை என்னுடைய கையெழுத்துடன் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பொது அதிகார பத்திர எண்.371/2008, 383/2008 ஆகிய ஆவணங்களை நான் கைப்பற்றி எனக்கு பின் வந்த விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்தேனா

என்றால் ஒப்படைத்தேன். பொது அதிகார பத்திர எண்.371/2008, 383/2008 ஆகிய ஆவணங்களை பதிவு செய்தது குறித்து எந்த வித பிரச்சனையும் இல்லை என்றால் என்னுடைய விசாரணையில் தெரியவில்லை.

அ.சா.6 ஐ விசாரணை செய்ததிலிருந்து அ.சா.6 ன் விசாரணையிலிருந்தும் மேற்படி இரண்டு பொது அதிகார பத்திரங்களும் பதிவு செய்ததில் எந்தவித முறைகேடும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி இரண்டு ஆவணங்களும் பதிவு செய்த காலத்தில் செட்டிக்குளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் அ.சா.8 குணசீலன் சார்பதிவாளர் பொறுப்பாக இருந்தாரா என்றால் சரிதான். அ.சா8 ன் விசாரணையிலிருந்தும் மேற்படி இரண்டு பொது அதிகார பத்திரங்களும் பதிவு செய்ததில் எந்தவித முறைகேடும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரிதான். ஒவ்வொரு ஆவணங்களையும் பதிவு செய்யப்படும் தேதியிலேயே ஸ்கேன் செய்யப்பட்டுவிடும் என்று அ.சா.8 சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

பத்திரங்கள் பதிவுக்கு வந்தால் சார்பதிவாளர் அதனை ஆய்வு செய்த பின்பு அதற்கு பதிவு எண் கொடுப்பார் என்று அ.சா.4 ன் விசாரணையிலிருந்து தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். பதிவு எண் கொடுத்த பிறகு சம்மந்தப்பட்ட நபர்களிடமிருந்து ரேகை மற்றும் கையெழுத்து ஆகியவற்றை அ.சா.4 வாங்குவார் என்றால் சரிதான். சார்பதிவாளர் அலுவலகத்தில் வேலை செய்யும் கோமகன் என்பவரை விசாரணை செய்ததில் மேற்படி சங்கதிகளின்படி பதிவுக்கு வரும் ஆவணங்களை அன்றைய தினமே ஒளிவருடல் செய்துவிடுவதாக தெரியவந்துள்ளது என்றால் சரியதான்.

அ.சா.11 பழனிவேலை விசாரித்து அவருடைய வாக்குமூலத்தை கணினியில் பதிவேற்றம் செய்தேன் என்றால் சரிதான். எந்த தேதியில் விசாரித்தேன் என்பதற்கு கையெழுத்துடன் தேதியை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாக்குமூலம் யார் மூலம் டைப் செய்யப்பட்டது என்பதை என்னுடைய வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த

வாக்குமூலத்தில் இயேவுடையானுக்கும், தனது பள்ளியின் தாளாளர் பழனி என்பவருக்கும் இடையேயான நிலப்பிரச்சனையை குறித்து அதிகபட்சமாக வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

பிரச்சனைக்குண்டான பொது அதிகார ஆவணம் 371/2008 மற்றும் 383/2008 ஆகிய ஆவணங்கள் குறித்து தனக்கு நேரடியாக தெரியும் என்று பட்டியல் சாட்சி பழனிவேல் அவருடைய வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையின் மூலமாக மேற்படி பொது அதிகார ஆவணங்களை பதிவு செய்ததில் எந்தவிதமான முறைகேடும் நடந்துள்ளதாக எனக்கு தெரியவரவில்லை என்றால் சரிதான். நான் வழக்கின் கோப்புக்களை எனக்கு பின்னர் வந்த விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்துவிட்டு பணியிடமாறுதலில் சென்றபிறகு இவ்வழக்கில் நடந்த மேல் விசாரணை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.